TERM3

மாதிரி வினாத்தாள் 1 T3

7th Standard

Reg.No. : | | | | | | |

அறிவியல்

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்

Time : 01:00:00 Hrs | Total Marks : 50

பகுதி-அ | 9 x 1 = 9

1) அதிக அடர்வுள்ள காடுகளில் காணப்படுவன ________

(a) மரங்கள் (b) புற்கள்

2) _______ இது ஓர் இயற்கைச் சூழ்நிலை மண்டலத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

(a) நெல்வயல் (b) பாலைவனம்

3) உணவுச் சங்கிலியின் மூன்றாவது நிலையில் ______ அமைந்துள்ளன.

(a) தாவர உண்ணிகள் (b) ஊன் உண்ணிகள்

4) பல உணவுச் சங்கிலிகள் இணைந்து காணப்படுவதற்கு ____ என்று பெயர்.

(a) உணவு வலை (b) உணவுச் சுழற்சி

5) ‘வன மகோற்சவம்’ பண்டிகை கொண்டாடும் மாதம் _______

(a) ஜுன் (b) ஜுலை

6) அதிக அளவு நீரைக் கொண்டுள்ள கோள் ______ ஆகும்.

(a) பூமி (b) செவ்வாய் கிரகம்

7) ________ மிக அதிக அளவில் நீரைக் கொண்டுள்ளது.

(a) பெருங்கடல் (b) குளம்

8) _______ என்பது நீரின் வாயு நிலையாகும்.

(a) மழை (b) நீராவி

9) _____ நீரைக் குடிநீராக மாற்றுவதற்குச் செயற்கைமுறையில் உப்பு நீரைக் குடிநீராக்கும் திட்டம் பயன்படுகிறது.

(a) கடல் (b) ஆற்று

பகுதி-ஆ | 8 x 1 = 8

10) எரிபொருள் தீப்பிடித்து எரியும் குறைந்த வெப்பநிலை ________ என்று அழைக்கப்படுகிறது

11) எண்ணெய்யால் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த ________ பயன்படுகிறது.

12) ஒரு கிலோகிராம் எரிபொருளை எரிக்கும் பொழுது வெளிப்படும் வெப்ப ஆற்றல் _________

13) பொருள் ஒன்று பெற்றுள்ள வெப்ப ஆற்றலை அளவிடப் பயன்படுவது

14) இயங்கும் வாகனம் ஒன்றின் சக்கரம் வெப்பம் அடைவதற்குக் காரணம் _________

15) வெப்பநிலை அளவீட்டில் நீரின் கொதிநிலை _______ ஆக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

16) சினிமாத் திரையில் பெறப்படும் பிம்பம் ________

17) பரப்பு ஒன்றிலிருந்து ஒளி திருப்பி அனுப்பப்படும் நிகழ்வு _______

பகுதி-இ | 6 x 1 = 6

18) பின்வரும் வார்த்தைகளை மாற்றியமைத்து உணவுச் சங்கிலியை அமைக்கவும்.

(அ) பாம்பு, எலி, நெல், கழுகு, வெட்டுக்கிளிகள்

_____→ _____→ ______ → ______ → ______

(ஆ) மனிதன், பெரிய மீன், தாவர மிதவை உயிரி, சிறிய மீன், பூச்சிகள்

_____→ _____→ ______ → ______ → ______

19) கீழே கொடுக்கப்பட்டுள்ள நீர் ஆதாரங்களில், கலைந்துள்ள எழுத்துக்களைச் சரியான முறையில் எழுதுக.

ழைம, னிப, றுஆ, ல்கட, ரிஏ, ம்குள

20) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான கூற்று எது? தவறான கூற்று எது? என்பதைக் குறிக்கவும்.

தவறான கூற்றிற்குச் சரியான பதிலை எழுதவும்

தன்னிச்சையாக எரியும் பொருள்களை எரியூட்ட வெப்பம் தேவையில்லை.

21) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான கூற்று எது? தவறான கூற்று எது? என்பதைக் குறிக்கவும்.

தவறான கூற்றிற்குச் சரியான பதிலை எழுதவும்.

எல்லா வகையான தீயையும் நீரைப் பயன்படுத்தி அணைத்து விடலாம்.

22) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான கூற்று எது? தவறான கூற்று எது? என்பதைக் குறிக்கவும்.

தவறான கூற்றிற்குச் சரியான பதிலை எழுதவும்

ஒளியில்லா எரியும் பகுதியில் வெப்பம் அதிகம்.

23) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான கூற்று எது? தவறான கூற்று எது? என்பதைக் குறிக்கவும்.

தவறான கூற்றிற்குச் சரியான பதிலை எழுதவும்

நல்ல எரிபொருள் என்பது குறைவான கலோரி மதிப்பு கொண்டது.

பகுதி-ஈ | 9 x 3 = 27

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

24)

| | | |
|---|---|---|
| மூன்றாம் ஊட்டநிலை ஊன் உண்ணிகள் பாம்பு | தாவர உண்ணிகள் இரண்டாம் ஊட்டநிலை எலி | தாவரங்கள் உற்பத்தியாளர்கள் முதலாம் ஊட்டநிலை |

அ) கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் உள்ள பொதுவான நிகழ்வு யாது?

ஆ) மேலே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களை ஆராய்ந்து ஓர் உணவுச் சங்கிலியை அமைக்கவும்.

25) வேறுபடுத்துக.

அ) நுகர்வோர்கள், சிதைப்பவை

ஆ) உணவுச் சங்கிலி, உணவு வலை.

26) காடுகளை அழிப்பதனால் பின்வருவனவற்றிற்கு ஏற்படும் விளைவுகளை எழுதுக

அ) காட்டு விலங்குகள்


ஆ) சுற்றுச்சூழல்

27) பின்வரும் முக்கியப் பண்புகளின் அடிப்படையில் காடுகளை வகைப்படுத்துக.

வெப்பமண்டல மழைக்காடுகள், புல்வெளிப் பிரதேசங்கள், பாலைவனம், இலையுதிர் காடுகள், ஊசியிலைக் காடுகள், தூந்திரப் பிரதேசக் காடுகள்

| வ.எண் | முக்கியப் பண்புகள் | காடுகள் |
|---|---|---|
| 1. | காடுகளில் தொடர்ந்து தீ | |
| 2. | மிதமான குளிர் காலம் | |
| 3. | உறைபனி, பனிக்கட்டி | |
| 4. | வெப்ப நாள்கள், குளிர் நாள்கள் | |
| 5. | மூடிய உறைபனி | |
| 6. | அதிக மழைப் பொழிவு | |

28) காடுகளில் உள்ள உணவு வலை கொடுக்கப்பட்டுள்ளது:




அ) மேலே உள்ள உணவு வலையைப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை இனங்காண்க

i) ஊன் உண்ணி


ii) தாவர உண்ணி

iii) உற்பத்தியாளர்

ஆ) நான்கு வகையான ஊண் உண்ணிகளை, உணவு வலையிலிருந்து தேர்ந்தெடுத்து, அதுபோல் எத்தனை வகை உணவு சங்கிலிகளை உங்களால் வரைய முடியும்?

29) நீர்ச் சுழற்சியின் படம் கொடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்காண் வார்த்தைகளை சரியான இடத்தில் எழுதுக

கடல், மேகம், ஆவியாதல், மழை



30) மனித இனத்திற்குத் தண்ணீர் மிகவும் அவசியம். காரணம் கூறுக.

31) அ) நகரமயமாக்கம் எதனால் நடைபெறுகிறது? நகரமயமாதலால்,

i) மனிதனுக்கு ஏற்படும் நன்மைகள்

ii) வன உயிரிகளுக்கு ஏற்படும் தீமைகள் ஆகியவற்றைப் பட்டியலிடுக.

ஆ) நகரமயமாதலினால் ஏற்படும் விளைவுகளைக் களைய உனக்குத் தெரிந்த ஒரு வழியைக் குறிப்பிடுக.

32) உங்கள் பள்ளி நண்பர்களுக்கு நீரைச் சேமிப்பதற்கான யோசனையைக் கூறுக.

அ) நீரைப் பயன்படுத்திய பின் குழாயை மூடவும்.

ஆ)

இ)

ஈ)

உ)

ஊ)

எ)

ஏ)

******************************************